RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt21316

OPEN ACCESS

# அ. வெண்ணிலாவின் கவிதைகளில் பாடுபொருள்கள்

ஆ. கலைவாணி [அ, *], பா. உமாராணி [அ]

[அ] மொழிகள் துறை - தமிழ்ப்பிரிவு, கற்பகம் உயர்கல்விக்கழகம், கோயம்புத்தூர்-641021, தமிழ்நாடு, இந்தியா.

# A. Vennila Poem's Themes

A. Kalaivani [a, *], B. Umarani [a]

[a] Department of Languages – Tamil Wing, Karpagam Academy of Higher Education, Coimbatore – 64102, Tamil Nadu, India.

* Corresponding Author: kalaikani1025@gmail.com

Received: 14-04-2021
Revised: 06-06-2021
Accepted: 13-07-2021
Published: 26-07-2021

Check for updates

## ABSTRACT

Literature is a mirror of a time and society. It has been shaping itself according to the environment in each period with each direction and trend and has been putting up its trace. Such literature is a tool language that helps to convey the ideas and feelings that one knows and feels to others. Poetry alone plays an important role in making the language beautiful. Starting with Sangapadals till today, many poets have been recording the times in which they live, the society around them and related events in their poems. In particular, womens are using literature as a platform to free themselves from the shackles of domination, to reflect on their food, and to express their feelings of struggle for rights. In the modern era, the feminist voice can be seen as the independent voice of the woman rather than being the common intellectual voice of the male social system. As short stories, novelties, novels, essays, poems, etc. To create many works in front of himself and the society, the language of poetry presents a deep understanding and brings out many psychological problems and changes. Modern women's vernacular poetry has focused on constructing and recreating a feminine alternative culture while putting forward arguments against male-dominated social conventions. A. Vennila is one of the most notable contemporary women writers who are creating such literature. Various prizes and awards have been given to his poetry collections. In this article you can see what are the themes in A.Vennila's poem.

**Keywords:** A.Vennila, Literature, Poem, Short stories, Themes.

## முன்னுரை

இலக்கியம் என்பது காலத்தை மையப்புள்ளியாக கொண்டு விளங்கி வருவதாகும். "ஒரு சமுதாயத்தின் விருப்பு, வெறுப்பு, நம்பிக்கை முதலியவற்றை வளர்த்துப் பயன்படுத்துவது அந்த சமுதாயத்தின் இலக்கியமே" என்பார் மு.வ (Varadarajan, 1965). சமூகத்தில் நடந்ததேறிய நிகழ்ச்சிகளையும் நடக்கும் நிகழ்ச்சிகளையும் இலக்கியங்களின் வழியே தான் அறிந்து கொள்ள முடிகின்றது. அந்தந்த காலகட்டத்திற்குரிய சமூகப் பொருளாதார அரசியல் பின்புலங்களின் அடிப்படையில் தோன்றிய இலக்கியங்களில் கவிதையும் இன்றியமையாத ஒன்றாகும்.

"மனிதனது சிந்தனை ஆற்றலைத் தூண்டி விடவும், தன்னைப் பற்றிய உள்முக சிந்தனையில் அவனை ஈடுபடுத்தவும் உதவும் ஆற்றல் மிக்க கலை வடிவம் கவிதையே ஆகும்" என்று கவிதையின் சிறப்பைக் கூறுகின்றார் (Maraimalai, 1986). அச்சிறப்பு வாய்ந்த கவிதையினை சங்க காலம் தொடங்கி இன்று வரை இலக்கியங்களில் பெண் கவிஞர்கள் தங்கள் பங்களிப்பை பதிவு செய்து கொண்டே தான்

வருகின்றனர். அவ்வகையில் பெண் மொழி கவிதைகளில் வெளிப்பட்டிருக்கும் பெண் சார்ந்த பதிவுகள், ஆண் சார்ந்த பதிவுத் தன்மைகளில் இருந்து விலகி தனித் தன்மைகளைக் கொண்டே அமைந்திருக்கின்றது. பெண் பற்றிய மதிப்பீடுகளை பெண் நிலையிலிருந்து பெண்ணே கட்டமைக்கும் பணிக்கு கருவியாக அமைகின்றன கவிதைகள்.

## நவீன பெண் கவிஞர்கள்

நவீன பெண் கவிஞர்கள் பலர் பெண்ணியம், பெண் விடுதலை, பெண் சுதந்திரம் என்பவற்றுக்கப்பால் அழகியல், அரசியல், சமூக விடுதலை என பலவற்றை அடிப்படையாகக் கொண்டு எழுத முற்பட்டனர். அவர்களுள் கொற்றவை, அம்பை, கிருஷ்ஷாங்கினி, தாமரை, கனிமொழி, மாலதி மைத்திரி, குட்டி ரேவதி, சக்தி ஜோதி, லீனா மணிமேகலை, சுகிர்தராணி, தி.பரமேஸ்வரி, சல்மா, தமிழச்சி தங்கபாண்டியன், அனார், ஆண்டாள் பிரியதர்ஷினி, ஆ.ரோஸ்லின், புதிய மாதவி என மிகப் பரந்த பரப்பளவை கொண்டுள்ள புதுக்கவிதை உலகில் குறிப்பிடத்தக்க படைப்பாளராக விளங்குபவர் அ. வெண்ணிலா.

## அ. வெண்ணிலா அறிமுகம்

அ. வெண்ணிலா தமிழ் எழுத்தாளரும், கவிஞரும் ஆவார். கவிஞர், சிறுகதை ஆசிரியர், கட்டுரையாளர், நாவலாசிரியர், ஆசிரியர், சிறு பத்திரிக்கை ஆசிரியர் என பன்முகத்தன்மை கொண்டு இயங்கி வருகிறார். இவரது படைப்புகள் ஆங்கிலம், மலையாளம், ஹிந்தி என பல மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. இவரது நூல்கள் பல்கலைக்கழகங்களிலும் கல்லூரியிலும் பாடமாக அமைக்கப் பெற்றுள்ளன. தமிழக அரசின் சிறந்த கவிதை நூலுக்கான விருது, புதுமைப்பித்தன் நினைவு விருது உட்பட பல அறக்கட்டளை விருதுகளை வாங்கியுள்ளார்.

## இலக்கியங்களில் அ. வெண்ணிலா படைப்புகள்

கவிதை நூல்கள், கடிதம், கட்டுரைகள், சிறுகதைகள், ஆய்வு நாவல்கள், தொகுப்பு நூல்கள் என பல பிரிவுகளில் தமது கவித்துவமிக்க படைப்புகளை இலக்கிய உலகிற்கு கொடுத்துள்ளார்.

## பாடு பொருள்கள்

இக்கால இலக்கிய வகைகளில் சிறந்த ஒன்றாக விளங்குவது கவிதை ஆகும். அகம், புறம் சார்ந்தவையே இலக்கியத்திற்கான பாடுபொருள்களாய் தேர்ந்தெடுக்கப்படுகின்றன. சமூகத்தில் ஆண்களுக்கு இருக்கும் சுதந்திரத் தன்மை பெண்களுக்கு இருப்பதில்லை என்றும், ஆண்கள் பொதுநிலையில் எழுதுபவர்களாகவும், பெண்கள் தன்னிலை சார்ந்தே எழுதுபவர்களாகவும் மதிப்பிடப்பட்டுள்ளது. இதை,

> "தன்னூறு வேட்கை கிழவன் முட்கிழத்தல் என்னும் காலை கிளத்திக்கு இல்லை" (Ganesaiyar, 2010)

இதையே, "பெண்ணின் மொழி அதிகாரத் துணிவற்றதாகவும், தன்னுடைய வாழ்வை எதிரொளிப்பதாகவும் மட்டுமே அமைந்துள்ளது" என பெண் அறிஞரான ரோபின் லேகாஃப் எழுதிய மொழியும் பெண்களுக்கான இடமும் என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார். அந்தந்த காலத்திற்கு ஏற்ப கவிஞனின் கனவுகளும், கற்பனைகளும் இருக்கும் என்பதால் நிகழ்கால நிகழ்வையும், எதிர்கால இயக்கங்களுமே கவிதைக்கு பாடுபொருளாக அமைந்திருக்கின்றன. அன்று தொட்டு இன்று வரை பெண் கவிஞர்கள் பாடுபொருள்களை திறம்பட கையாளும் நுட்பம் நிறைந்தவர்களாக கவிதைகள் மூலம் அறியப்படுகிறார்கள். அதிலும் குறிப்பாக அ.வெண்ணிலாவின் கவிதைகள் வெளிப்படுத்தாத பாடுபொருள்களே இல்லை என்னும் அளவிற்கு பல பார்வைகளில் தனது கவிதைகளில் எடுத்து இயம்பி உள்ளார். அவற்றை பின்வரும் பாடுபொருள்களின் வழி விரிவாக காணலாம்.

## பாடு பொருள்களின் வகைமைகள்

காதல், இல்லற வாழ்க்கை, தாய்மை, குழந்தைச்செல்வம், பெண்ணியம், மூன்றாம் பாலினம், இயற்கை, பாலியல் தொழிலாளர்கள், சமுதாயம், அரசியல், ஆன்மீகம், மனிதநேயம், உடல் மொழி எனப் பாடு பொருள்களின் எல்லையை விரித்து கொண்டே தான் செல்கிறார். ஒவ்வொரு பாடுபொருள்களை பற்றியும் அவரது கவிதையின் வழி அதனதன் தளத்தில் நின்று நுட்பமான சிந்தனைகளுடன் ஆய்வதைக் காண்போம்.

## பெண்ணியம்

'பெண்ணே பேசு

தெறிக்கும் உன்னின் ஒரு சொல்

பூமியை பிளக்கட்டும்..

....

உன்னின் சொல்

யுகத்தின் சொல்' (Vennila, 2012)

என பெண்ணை மையமாகக் கொண்டு விரியும் இவ் வரிகளில் பெண்ணின் ஒரு சொல், யுகத்தினை பிரதிபலிக்கும் என்றும் பேச மடந்தையாக இருக்க வேண்டாம் என்றும் பெண்ணியம் பேசுகிறது.

## குழந்தைச்செல்வம்

'சத்தம் போடாமல்

விளையாடுங்கள்

கூச்சமே இல்லாமல்

சொல்கிறார்கள்

குழந்தைகளிடம்'

குழந்தைகளின் இயல்பை அதட்டி மிரட்டி தனதாக்கி கொள்கிறார்கள் பெரியவர்கள் என்பதை நயமாக இப்பாடுபொருளில் மொழிகிறார் அ.வெண்ணிலா (Vennila, 2002).

## வாழ்வியல்

'வாழ்க்கை

கற்றுத் தருவதில் அல்ல

கற்றுக் கொள்வதில்தான்'

இவ்வளவு எளிதாக வாழ்வினை பாடுபொருளாக்கி அதன் இரகசியத்தை கருப்பொருளாக கவிதையின் வழி மொழிகிறார்.

## சமுதாயம்

'யுத்தம் பற்றி

எனக்குத் தெரிந்திருக்க நியாயமில்லைதான்..,

.......

எட்டுக்கு எட்டடி

இருட்டறையில் வாழ்ந்து

பழகியுள்ள என்னால்

ஓரளவுக்கு

பதுங்கு குழிகளின்

அனுபவம் உணர முடிகிறது.' (Vennila, 2002)

பெரும்பாலும் நம் அனைவரின் வாழ்க்கைச் சூழலின் பிரதிபலிப்பாய் போரையும் நம் வசிப்பிடத்தையும் சமூகத்தையும் ஒன்று சேர இவ்வரிகளில் உணர முடிவதை கண்முன்னே பதியும்படி படைத்திருக்கிறார்.

## உடல் மொழி

'குளித்துவிட்டு அப்படியே ஓடி வரக்கூடாது மகளே

துண்டு கட்டியிருக்கேம்மா

இடுப்பிலிருந்து துண்டை

நெஞ்சுவரை ஏற்று

மேல்சட்டை அணிந்து தூங்கு

கசகசன்னு இருக்கும்மா

புழுங்கிக் கசங்கினாலும்

காற்றாட முடியாது மகளே

நம்ம வீடு தானேம்மா

செங்கல் சுவருக்கும்

கண் உண்டு மகளே

குழந்தையில்லையாம்மா நான்

குழந்தைதான் தங்கமே

பெண் குழந்தை!' (Vennila, 2014)

பெண்ணுடலை பாடுபொருளாக்கிய இக்கவிதை வரிகளில் பெண்ணின் சமுதாய சிக்கலையும் வலிகளையும் இயல்பாக எடுத்தியம்புவதை காண முடிகிறது. ஒரு பெண்ணானவள் குழந்தையிலிருந்தே தன் உடல் மொழியை சமுதாயத்திற்காக எப்படி மாற்றிக் கொள்ள வேண்டி இருக்கிறது என்பதை விவரிக்கிறது இவ்வரிகள்.

## இல்லறம்

'உன் கழுத்தை இறுக்கி

அணைத்துக் கொண்டு

உறங்க பிடிக்குமெனக்கு,

........

அநேக நாட்களில்

அது என் விருப்பமாய்

மட்டும் இருப்பதை”

பெண்ணின் எதிர்பார்ப்புகளும் விருப்பங்களும் இல்லற வாழ்வில் அடிபட்டு போவதின் வலியை பாடுபொருளாக்கியிருக்கிறார் அ.வெண்ணிலா (Vennila, 2000).

இதேபோலவே, ‘ரத்தப் பெருக்கோடும் உறங்க வேண்டியிருக்கு’ எனும் இவரது வரிகள் சங்கடங்களை காட்சிபடுத்துவதுடன் மட்டுமல்லாது அந்தக்கவிதையைப் படித்த ஆண்களுக்குள் நிகழ்த்தி, தனது தாயை, மனைவியை, சகோதரியை, மகளை அந்த நேரங்களில் உள்ளத்தாலும் உடலாலும் அரவணைத்துக்கொள்ள வேண்டிய மனநிலைக்கு உறுத்துவது நிச்சயம் (Vennila, 2000).

## காதல்

‘பரவசங்கள் உதிர்த்துவிட்ட காதலை

பிறரறியாமல் கொன்று புதைப்போம்,

பரவசத்தையாவது

கைவசம் வைத்திருப்போம்.’ (Vennila, 2012)

காதலை பாடுபொருளாக்கி பல கவிதைகள் இயற்றியிருப்பினும் அக்காதல் பரவசங்களாகவேனும் பரவி இருக்கட்டும் என்று இக்கவிதை வரிகளில் எழுதி இருக்கிறார்.

## இயற்கை

"துளிர்க்கும்

உதிர்க்கும்

முளைத்திடும்

மரங்களைச் சுற்றும் பருவங்கள்

பெண் பருவம்" என பெண்ணின் பருவங்களை மரத்தின் பருவமாறுதலோடு ஒப்பிட்டு காட்டுகிறார் (Vennila, 2007). இதேபோல்,

‘கடல் என்ன வடிவம்

……

நம் பேரன்பின் உருக் கொண்டு.’

என்று வரிகளில் கடல் கூட நம் பேரன்பை போல் வடிவமில்லாது அமைந்திருப்பதை இயற்கையை பாடு பொருளாக்கி எழுதி இருக்கிறார்.

## பாலியல்

பெண் குழந்தைகள் மீது நிகழ்த்தப் பெரும் பாலியல் துன்புறுத்தல் பெரும்பாலும் அறிந்தவர்களாலேயே நிகழ்த்தப்படுகின்றது என்பது உண்மை. பருவம் குறித்து அறியாச் சிறுமிகளை பாலியல் தூண்டலுக்கு உட்படுத்துதலும், மிரண்டு பயம் கொள்ளும் குழந்தைகளை மிரட்டுவதுமாக இவ்வதைகள் பெண் குழந்தைகளின் மீது அரங்கேறுகின்றன என்பதை

"கண்ணை தொட்டான்

மூக்கை கிள்ளினான்

உதட்டை திருகினான்

கழுத்தில் இருந்து கை இறக்கி புறப்படாத மார்பைத் திருகினான்" (Vennila, 2012)

என பெண்ணின் மீது நிகழ்த்தபடும் பாலியலை பாடுபொருளாக்கி மொழிகிறார்.

## முடிவுரை

வாழ்வின் அன்றாட நிகழ்வுகளையும் மனிதர்களின் இயல்புகளையும் நினைவு கூறுகிற பிரதிபலிக்கிற விதமாக அ.வெண்ணிலாவின் படைப்புகள் அமைந்துள்ளன என்பதை இப்பாடு பொருள்களின் வழி அறிய முடிகிறது. இதன் வழி பெண்களின் நோக்கையும் போக்கையும் தனித்து இனம் காட்டுவதாகவும், பெண் படைப்புகள் ஆண் படைப்புகளில் இருந்து வேறுபட்டு நிற்கும் பாங்கையும் வெளிப்படுத்தியுள்ளது. பொதுவாக சமூக முன்னேற்றத்திற்காகவும் பெண்ணின் அக உணர்வுகளை அப்பட்டமாக கவிதைகளாக்கி அனைவரையும் சிந்திக்க வைப்பதோடு இல்லாமல் மாற்றம் வேண்டும் என்ற உந்துதலை நமக்குள் விதைப்பதாகவே இருக்கிறது.

## References

Ganesaiyar, (2010) Tholkappiyam Urai, International Institute of Tamil Studies, Chennai, India.

Maraimalai, (1986) Pudhukavithaiyin Thekka Nilai, Thirumagal Nialayam, Chennai, India

Varadarajan, M. (1965) Ilakkiya Thiran, Pari Nilayam, Chennai, India

Vennila, A. (2000) Neeril Alaiyum Mugam, Pavai Publications, Chennai, India

Vennila, A. (2002) Aathiyil Sorkal Irunthana, Agani Veliyedu, Vandhavasi, India

Vennila, A. (2007) Kanavaipoloru Maranam, Agani Veliyedu, Vandhavasi, India

Vennila, A. (2012) Thurogathin Nilal, Agani Veliyedu, Vandhavasi, India

Vennila, A. (2014) Eriyathuvangum Kadal, Agani Veliyedu, Vandhavasi, India

**Funding:** NIL
**Acknowledgement:** NIL
**Conflict of Interest:** NIL
**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author(s) 2021. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License